
# அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி-பெரும்பாக்கம்
## சென்னை -131
# நாட்டு நலப்பணித் திட்டம்
## ஆண்டறிக்கை - 2023-24

1. உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு பெரும்பாக்கம் அரசு கல்லூரியில் 5 ஜூன் 2023 அன்று தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பாக **ஆயிரம் மரக்கன்றுகள் நடும் நிகழ்வின்** ஒரு பகுதியாக மரக்கன்றுகள் நடப்பட்டது. இந்த நிகழ்வை நாட்டு நலப்பணி திட்டம் ஒருங்கிணைத்தது.





2. பெரும்பாக்கம் அரசு கல்லூரியில் கடந்த ஜூன் 21 அன்று நாட்டு நலப்பணி திட்ட மாணவ மாணவிகளுக்கு ஈஷா மையம் சார்ந்த யோகக் கலை வல்லுநர்கள் மூலம் **யோகப் பயிற்சி** அளிக்கப்பட்டது.



3. பெரும்பாக்கம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கடந்த ஜூன் 26 அன்று **போதைப்பொருள் பயன்பாடு மற்றும் சட்டவிரோத கடத்தல்** தடுப்புக்கான சர்வதேச நாளை முன்னிட்டு , **போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வு பேரணி** பெரும்பாக்கம் காவல்துறையினர் உதவியுடன் நடத்தப்பட்டது.





4. பெரும்பாக்கம் அரசு கல்லூரியில் கடந்த 2023 செப்டம்பர் 8 அன்று நாட்டு நலப்பணி திட்டம் சார்பாக தோழமை அமைப்பினர் உடன் இணைந்து **குழந்தைகளுக்கான பாதுகாப்பான இணையம்** குறித்து விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி மற்றும் நாடகம் நடத்தப்பட்டது.




5. பெரும்பாக்கம் அரசு கல்லூரியிலிருந்து நாட்டு நலப்பணி திட்டத்தைச் சார்ந்த இரண்டு மாணவிகள் சென்னை பல்கலைக்கழகத்தின் சார்பாக எழும்பூரில் உள்ள விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற, **குடியரசு தின அணிவகுப்பில்** கலந்து கொள்பவர்களுக்கான **வீரர்கள் தேர்வில்** கலந்து கொண்டனர், அதில் ஆங்கிலத் துறையைச் சார்ந்த மாணவி சுசி துர்கா **இறுதிச்சுற்று** வரை முன்னேறினார்.




6. பெரும்பாக்கம் கல்லூரியின் நாட்டு நலப்பணி திட்டத்தை சார்ந்த மாணவ மாணவிகள் கடந்த 2023 அக்டோபர் 13ஆம் தேதி அன்று கல்லூரி **வளாக தூய்மை பணி** மேற்கொண்டனர் அன்று அவர்களுக்கு **அனைத்து மக்கள் சக்தி இயக்கம்** சார்பாக மதிய உணவு வழங்கப்பட்டது.



7. பெரும்பாக்கம் கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்ட மாணவ மாணவிகள் கடந்த டிசம்பர் எட்டாம் தேதி **வெள்ளம் பாதித்த கல்லூரி நூலகத்தில்** பாதிக்கப்பட்ட **புத்தகங்களை ஒழுங்குபடுத்தும்** பணி மேற்கொண்டனர்.




8. சென்னையில் நடைபெற்ற **கேலோ இந்தியா** போட்டியை காணும் பார்வையாளர்களாக பெரும்பாக்கம் கல்லூரியின் நாட்டு நலப்பணி திட்ட மாணவ மாணவிகள் கடந்த ஜனவரி 19 மற்றும் 21 ஆகிய இரண்டு நாட்கள் கலந்து கொண்டனர்.



9. கடந்த பிப்ரவரி ஐந்தாம் தேதி அன்று பெரும்பாக்கம் கல்லூரியில் நாட்டு நலப்பணித் திட்டத்தின் சார்பாக அனைத்து மக்கள் சக்தி இயக்கத்தினருடன் இணைந்து **போதை மற்றும் சைபர் கிரைம்** ஆகியவற்றுக்கு எதிரான **விழிப்புணர்வு கருத்தரங்கம்** நடைபெற்றது .




10. கருத்தரங்கத்தை தொடர்ந்து நாட்டு நலப்பணி திட்ட மாணவ மாணவிகளின் **போதை விழிப்புணர்வு பேரணி** கல்லூரியில் இருந்து தொடங்கி பெரும்பாக்கம் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பு பகுதிகள் வழியாக சென்று மீண்டும் கல்லூரியில் நிறைவடைந்தது மாணாக்கர்களுக்கு மதியஉணவு வழங்கப்பட்டது.




11. பெரும்பாக்கம் கல்லூரியில் பிப்ரவரி ஏழாம் தேதி மதியம் நாட்டு நலப்பணி திட்டத்தின் சார்பாக **அனைத்து மக்கள் சக்தி இயக்கத்தினருடன்** இணைந்து மாணவ மாணவிகளுக்கு **ஊட்டச்சத்து பானம்** வழங்கப்பட்டது.




12. பெரும்பாக்கம் கல்லூரியில் பிப்ரவரி 28 2024 அன்று நாட்டு நலப்பணி திட்ட மாணவ மாணவிகளால் கல்லூரியின் முன் உள்ள **மரக்கன்றுகளுக்கு நீர் ஊற்றும் பராமரி ப்பு பணி** நடைபெற்றது.




13. பெரும்பாக்கம் கல்லூரியின் **நாட்டு நல பணித்திட்டம்** மற்றும் **இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம்** இணைந்து நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் 96 ஆம் பிளாக் அருகில் **லயன்ஸ் ரத்த வங்கியுடன் இணைந்து** மாபெரும் **ரத்ததான முகாம்** நடைபெற்றது இதில் சுமார் 50 மாணவர்கள் **ரத்த தானம்** செய்தனர்.



14. பெரும்பாக்கம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கடந்த மார்ச் 8 அன்று சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு **நேரு யுவகேந்திரா** உடன் இணைந்து மகளிர்க்கான **ஆரோக்கியம் மற்றும் உடல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு ஓட்டம்** நடத்தப்பட்டது.




15. நாட்டு நலப்பணித் திட்டத்தின் 2023-24 ஆண்டிற்கான **சிறப்பு முகாம்** பெரும்பாக்கம் மற்றும் செம்மேஞ்சேரி குடியிருப்பு பகுதிகளில் கடந்த மார்ச் 20 முதல் 26 வரை நடத்தப்பட்டது. **பெரும்பாக்கம் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், சுமைதாங்கி அறக்கட்டளை, தோழமை தொண்டு நிறுவனம் , டர்னிங் பாயிண்ட் , பெரும்பாக்கம் காவல் நிலையத்தினர்** ஆகியோர் பங்களிப்புடன் சிறப்பாக நடந்தேறியது. இதன் ஒரு பகுதியாக உயர்நிலை பள்ளியில் **போதை விழிப்புணர்வு நாடகங்களும்**, குடியிருப்பு பகுதிகளில் **வாக்காளர் விழிப்புணர்வு பேரணியும்** நடத்தப்பட்டது.



அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
பெரும்பாக்கம், சென்னை-131

நாட்டு நலப்பணித் திட்டம்
சிறப்பு முகாம் - தொடக்க விழா
(20.03.2024 – 26.03.2024)
அழைப்பிதழ்
சேவைக்களம்: நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்-
பெரும்பாக்கம், செம்மஞ்சேரி குடியிருப்பு

அன்புடையீர், வணக்கம். நமது கல்லூரியின் 'நாட்டு நலப்பணித் திட்டத்தின்' சிறப்பு முகாம் தொடக்க விழா, எதிர்வரும் மார்ச்–20 ஆம் நாள் (20.3.2024) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில், கல்லூரி வளாகத்தில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் தலைமையுரையாற்ற,
கல்லூரி முதல்வர் முனைவர் ச. சக்தி அவர்களும்

சிறப்பு விருந்தினர்களாக
முனைவர் வனிதா அகர்வால் அவர்களும்
(NSS, திட்ட ஒருங்கிணைப்பாளர், சென்னைப் பல்கலைக் கழகம்.)
திரு J. குமரேசன் E E, நிர்வாகப் பொறியாளர்,TNUHDB அவர்களும்
திருமதி கி. சுஜாதேவி அவர்களும் உதவி ஆய்வாளர் ,
(T n பெரும்பாக்கம் காவல் நிலையம்)
திருமதி S. ஜெயலட்சுமி (சுமைதாங்கி அறக்கட்டளை)
அவர்களும்
கலந்துகொண்டு உரையாற்ற இசைவு தந்துள்ளனர்.
அனைத்துத் தொண்டு நிறுவனங்கள், குடியிருப்போர் நலச்சங்கத்தினர் மற்றும்
பெரும்பாக்கம், செம்மஞ்சேரி குடியிருப்பு பகுதி மக்கள்
ஆகியோர் வருகைதந்து விழாவினைச் சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு
நாட்டு நலப்பணித் திட்டம்

பெரும்பாக்கம் – நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புப் பகுதியில்

நாட்டு நலப்பணித்திட்ட சிறப்பு முகாம் நிகழ்வுகள்

| நாள் | இடம் | முற்பகல் கள நிகழ்வுகள் | பிற்பகல் சிறப்பு நிகழ்வுகள் |
|---|---|---|---|
| 21/03/2024 வியாழன் | பெரும்பாக்கம் கல்லூரிச் சாலைப் பகுதி/ குடியிருப்புகள் | மரக்கன்றுகள் நடுதல் , பராமரித்தல் | பெண்கள் பாதுகாப்பு - விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் |
| 21/03/2024 வெள்ளி | பெரும்பாக்கம் , செம்மஞ்சேரி நகர்ப்புற மேம்பாட்டு வாரியக் குடியிருப்பு | பள்ளி தூய்மைப்பணி | வாக்காளர் விழிப்புணர்வுப் பேரணி |
| 21/03/2024 சனி | பெரும்பாக்கம்- லைட் ஹவுஸ் | தூய்மைப் பணி | சூழலியல் கலை நிகழ்ச்சி |
| 21/03/2024 ஞாயிறு | பெரும்பாக்கம் குடியிருப்பு | நூறு விழுக்காடு உயர்கல்வி- இல்லந்தோறும் கலந்துரையாடல் | சாலைப் பாதுகாப்பு விதிமுறைகள் பரப்புரை |
| 21/03/2024 திங்கள் | கல்லூரி வளாகம் | பெண்கள் உடல் நலன் - மருத்துவ முகாம் | நோயற்ற வாழ்வு - கருத்தரங்கம் |

தொடக்கவிழா நிகழ்வுகள்

தமிழ்த்தாய் வாழ்த்து

வரவேற்புரை : முனைவர் சே. வெங்கடேஷ்
NSS திட்ட அலுவலர்

தலைமை : முனைவர் ச. சக்தி கல்லூரி முதல்வர்

முன்னிலை
திரு J. குமரேசன் EE, நிர்வாகப் பொறியாளர்,TNUHDB

முகாம் அறிமுகவுரை :
பேரா. இரா. பச்சியப்பன் NSS திட்டஅலுவலர்

முகாம் சிறப்புரை
முனைவர் வனிதா அகர்வால் அவர்கள்
NSS, திட்ட ஒருங்கிணைப்பாளர், சென்னைப் பல்கலைக் கழகம்.
திருமதி S. ஜெயலட்சுமி அவர்கள் , சுமைதாங்கி அறக்கட்டளை
திருமதி. கி. சுஜாதேவி அவர்கள் உதவி ஆய்வாளர் ,
(T n பெரும்பாக்கம் காவல் நிலையம்)

வாழ்த்துரை
பேராசிரியர் ர. தங்கவேல் அவர்கள், தமிழ்த்துறைத் தலைவர்
முனைவர் ஜ. ஜெயக்குமார் அவர்கள், வணிகவியல் துறைத் தலைவர்
பேரா. பி. மலையரசு, அவர்கள், கணினி அறிவியல் துறைத் தலைவர்
முனைவர் தே. ஸ்ரீவித்யா அவர்கள், வேதியியல் துறைத் தலைவர்
திரு. ச. டார்வின் மோசஸ் அவர்கள், CO TNUHDB
திரு. த.ச. மொரார்ஜி தேசாய் அவர்கள், இயக்குநர், டர்னிங் பாயிண்ட்
திரு. S. வினோத்பாபு அவர்கள், ஒருங்கிணைப்பாளர், சுமைதாங்கி அறக்கட்டளை

நன்றியுரை
NSS மாணவர்கள்
நாட்டுப்பண்

சிறப்பு முகாமின் ஒரு பகுதியாக மார்ச் 25 அன்று **சத்ய சாய் மருத்துவ கல்லூரி மற்றும் அறக்கட்டளையின்** சார்பாக **ரத்த சோகை மற்றும் கண் பரிசோதனை மருத்துவ முகாம்** நடத்தப்பட்டது.

